**சார்பு நீதிமன்றம்,திருத்துறைப்பூண்டி**

**OS. 118/2023**

நாள் 11.03.2025

வா.**சா.1. பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

எனக்கு எத்தனை ஆண் குழந்தைகள் என்றால் 2. பெண் குழந்தைகள் 4. மூத்த பெண்ணை எனது மாமியார் வளர்த்தார். நான் தான் திருமணத்திற்கு செலவு செய்தேன். எனது 2வது மகள் ை ஹஜா நாச்சியார் திருமணம் செய்யப்பட்டு விவகாரத்து ஆகி பிரதிவாதியுடன் வசித்து வருகிறார் என்றால் சரிதான். ைஹஜா நாச்சியார் என்பவருக்கு ஒரு குழந்தை உள்ளது என்றால் சரிதான். ை ஹஜா நாச்சியாரும் மற்றும் அவரது குழந்தையும் பிரதிவாதிதான் பார்த்து வருகிறார் என்றால் சரிதான்.எனது 3வது மகள் நிலோபர் என்பவரை பிரதிவாதிதான் திருமணம் செய்து கொடுத்தார் என்றால் ரூ.1,00,000/– பணமும் 10 பவுன் நகையும் என் மனைவியிடம் கொடுத்தேன். எனது 3வது மகள் திருமணம் 2024ல் நடைபெற்றது. அதற்கு முன்பாகவே நான் 2020ல் வீட்டை விட்டு வெளியே வாடகைக்கு சென்றுவிட்டேன். 3வது மகளுக்கு திருமணத்தின்போது நான் பணம் நகை கொடுத்ததாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. எனது 4வது மகள் திருமணம் ஆகாமல் பிரதிவாதியுடன் தான் இருந்து வருகிறார் என்றால் சரிதான். எனது மூத்த மகன் காதல் திருமணம் செய்து கொண்டு தனியாக வாழந்து வருகிறார். எனது 2வது மகன் கமாலுதீன்

என்பவர் திருமணம் ஆகாமல் தாவா சொத்தின் வீட்டில் தான் பிரதிவாதியுடன் வசித்து வருகிறார். நான் தற்போது தனியாக ஒரு வாடகை வீட்டில் குடியிருந்து வாசலில் பெட்டிகடை வைத்து நடந்து வருகிறேன். பூர்வீக சொத்து உள்ளதால் என்றால் இருந்தது தற்போது விற்பனை செய்துவிட்டேன். நான் வங்கி கணக்கில் பணம் வைத்து கொண்டு தனியாக செலவு செய்துகொண்டு பிரதிவாதிகளை பராமரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மாமனார் சிங்கப்பூர் ஜாமான்கள் கடை வைத்து வியாபாரம் செய்து வந்தார். நான் பெட்டிக்கடை வைத்து நடத்தி வந்தேன். பெட்டிக்கடையில் பெரிய அளவில் வியாபாரம் நடக்காது என்றால் சரிதான். பிரதிவாதியின் தந்தை குடும்பத்தினர் பிரதிவாதியும் எனது மகளையும் பராமரித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.